பெற்று, இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய ஆணை பிறப்பித்த அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Please sit down. இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரை இருக்கின்ற காரணத்தினால் நேரமில்லை. (குறுக்கீடு) Please sit down. திரு. ம. கலை அரசு, உட்காருங்கள். நீங்கள் என்னுடைய அறைக்கு வந்து இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். It is under my consideration. Please sit down. (குறுக்கீடு) உட்காருங்கள். நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். Please sit down. (குறுக்கீடுகள்) திரு. ம. கலை அரசு, உங்களுக்கு நான் மைக் கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேளுங்கள். இதுகுறித்து என்னிடத்தில் நேற்றுதான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். நான் அதுபற்றி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறேன். It is under my consideration. (குறுக்கீடு) அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அது பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறேனே தவிர, அதை நான் நிராகரிக்கவில்லை. நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ, வசதிக்குத் தகுந்தவாறு எடுத்துக்கொள்ளப்படும். Please sit down. (குறுக்கீடு) இதற்குமேல் நீங்கள் எழுந்து நின்று கொண்டிருப்பது முறையல்ல. (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் சொல்கிறேன். என்னை வேறு என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?

2012 மே 10]

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 11-10

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டண சலுகை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் நான்கு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.*

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30-3-2012 அன்று மின் கட்டண விகித மாற்றம் குறித்த தனது ஆணையை வெளியிட்டபோது, அதில் விவசாயிகள், விசைத்தறி நெசவாளர்கள், வீட்டு மின் பயனீட்டாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு 3,554 கோடியே 16 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கட்டணச் சலுகையை எனது தலைமையிலான அரசு வழங்கியிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 740 கோடி ரூபாய்க்கான மானியத்தையும் இந்த மாமன்றத்திலே நான் அறிவித்தேன்.

இந்தக் கட்டணச் சலுகையின்படி, விசைத்தறி நெசவாளர்கள் தற்பொழுது இரு மாதங்களுக்குப் பயன்படுத்தும் முதல் 500 யூனிட்டுகளுக்குக் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. 500 யூனிட்டுகளுக்குமேல் மின்சாரம் பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்கள் 501 யூனிட்டுகளிலிருந்து, ஒரு யூனிட்டுக்கு நான்கு ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். அதாவது, முதல் 500 யூனிட்டுகள் வரை விசைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 4 ரூபாய் 50 காசு என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை